# அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2018

## பதினொன்றாம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

நேரம்: 2.30 மணி

பதிவு எண் : | | | | | | |

மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள் :

1. அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - அ

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

I. சரியான விடையினை தேர்ந்தெடுக்கவும்: 20×1=20

1) நிதித் தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

2) நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
அ) சமூகக்கணக்கியல் ஆ) காரியதரிசிகளின்கணக்கியல் இ) மேலாண்மைக்கணக்கியல் ஈ) பொறுப்புகணக்கியல்

3) இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மைய வங்கி ஆ) இந்திய அடக்கவிலை இ) உச்சநீதிமன்றம் ஈ) இந்தியப்பட்டயக்கணக்காளர்நிறுவனம்

4) இறுதி சரக்கிருப்பு, அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு
அ) முக்கியத்துவ மரபு ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து இ) முன்னெச்சரிக்கை மரபு ஈ) நிகழ்வு தீர்வு /கருத்து

5) பின்வருவனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது?
அ) கட்டடம் கணக்கு ஆ) கொடுபடவேண்டிய சம்பள க/கு இ) மகேஷ் க/கு ஈ) பாலன் க/கு

6) ஒரு கணக்கின் வரவு மொத்தத்தை விட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு இ) இருப்பு இன்மை ஈ) பற்றும் மற்றும் வரவு இருப்பு

7) இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும் வரவுப் பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு
அ) வியாபார கணக்கு ஆ) வேறுபாட்டு கணக்கு இ) அனாமத்து கணக்கு ஈ) இதர கணக்கு

8) விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம்
அ) பற்றுக் குறிப்பு ஆ) வரவுக் குறிப்பு இ) இடாப்பு ஈ) ரொக்க இரசீது

9) முப்பத்தி ரொக்க ஏட்டில், முன்னிருந்து தூக்கி எழுதப்பட்ட வங்கி மேல்வரைப் பற்றின் இருப்பு தோன்றுவது
அ) ரொக்கப் பத்தி பற்றுப்பக்கம் ஆ) ரொக்கப்பத்தி வரவுப் பக்கம்
இ) வங்கிப் பத்தி பற்றுப் பக்கம் ஈ) வங்கிப் பத்தி வரவுப் பக்கம்

10) வங்கி அறிக்கையின்படி இருப்பு 1,000. செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்படாதது ரூ. 2,000. ரொக்க ஏட்டில் வங்கிப்பத்தியின் இருப்பு எவ்வளவு?
அ) ரூ. 3,000 மேல் வரைப்பற்று ஆ) ரூ. 3,000 சாதகமான இருப்பு
இ) ரூ. 1,000 மேல் வரைப்பற்று ஈ) ரூ. 1,000 சாதகமான இருப்பு

11) இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக்கணக்கில் பற்று வைப்பது
அ) பகுதி விடுபிழை ஆ) விதிப்பிழை இ) முழு விடுபிழை ஈ) இருமுறை பதிந்த பிழை

12) ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது?
அ) காலப்போக்கு ஆ) தேய்வு மற்றும் உராய்வு இ) தொழில் நுட்ப மாற்றங்கள் ஈ) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை

13) நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நடுத்தர காலக் கடன் தொகை
அ) முதலினச் செலவுகள் ஆ) வருவாயினச் செலவுகள் இ) வருவாயின வரவுகள் ஈ) முதலின வரவுகள்

14) உள்தூக்குக் கூலி எதில் காண்பிக்கப்படும்?
அ) வியாபாரக் கணக்கில் ஆ) இலாப நட்டக் கணக்கில் இ) கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

15) நிலைச் சொத்து விற்பனை மூலம் பெறப்படும் தொகை எந்த கணக்கில் வரவு வைக்கப்படுகிறது?
அ) இலாப நட்டக் கணக்கு ஆ) நிலைச் சொத்துக் கணக்கு இ) தேய்மானக் கணக்கு ஈ) வங்கிக் கணக்கு

16) ........... என்பது ஒரு கடனாளி தன் கடன் தொகையைச் செலுத்தத் தவறுவதால் ஏற்படும் இழப்பாகும்.
அ) வராக்கடன் ஆ) கடன் இ) பற்பல கடனாளிகள் ஈ) வராஐயக்கடன் ஒதுக்கு

17) கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?
அ) இரட்டைத் தன்மை ஆ) நிலைத்தன்மை இ) நிறுவனத் தொடர்ச்சி ஈ) நிகழ்வுத் தன்மை

18) ரொக்க ஏடு பராமரிக்கப்படும் போது, தனியாக ரொக்கக் கணக்கு மற்றும் .......... கணக்கு பேரேட்டில் தயாரிக்க வேண்டியதில்லை.
அ) ரொக்கக் கணக்கு ஆ) வங்கி கணக்கு இ) எடுப்பு கணக்கு ஈ) தள்ளுபடி கணக்கு

19) ரூ. 50 மதிப்புள்ள சரக்குகளை அறநிதிக்கு கொடுத்ததை எந்த கணக்கில் வரவு வைக்க வேண்டும்.
அ) அறநிதிக்கணக்கு ஆ) விற்பனைக் கணக்கு இ) கொள்முதல் கணக்கு ஈ) ரொக்கக்கணக்கு

20) சொத்தின் ஆரம்ப அடக்கவிலை = ரூ. 1,00,000, எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் = 5, எதிர்நோக்கும் இறுதி மதிப்பு = ரூ. 2,000. நேர்க்கோட்டு முறையில் மூன்றாம் ஆண்டு தேய்மானத்தொகை எவ்வளவு?

### பகுதி - ஆ

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 21க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 7×2=14

21) பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக:

| நாள் | விபரம் | பே.ப.எண் | பற்று (ரூ.) | வரவு (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | ……………… க/கு ப<br>……………… க/கு<br>(ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ரூ.20,000) | | 20,000 | 20,000 |
| 2. | ……………… க/கு ப<br>……………… க/கு ப<br>நிஹா க/கு<br>(ரூ. 18,800 பெற்றுக்கொண்டு நிஹாவின் ரூ.19,000ற்கான க/கு தீர்க்கப்பட்டது) | | 18,800<br>200 | 19,000 |

22) கணக்கியல் தகவல்களை பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகளின் பெயர்களைத் தருக.
23) கணக்கியலில் முழு வெளியீட்டுக் கொள்கை என்றால் என்ன?
24) இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.
25) தேய்மானம் வரைவிலக்கணம் தருக.
26) ஆட்டோமொபைல் நிறுவனம் நடத்தும் இராணியின் ஏடுகளில் பின்வரும் விவரங்களைக் கணக்கியல் சமன்பாட்டின்படி பதிவு செய்க.
i) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ. 80,000. ii) இரமேஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ரூ. 10,000 iii) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ரூ. 6,000. iv) கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் ரூ. 8,000
27) பின்வரும் தகவல்களை கொண்டு அதன் செலுத்தும் நாட்களை கணக்கிடுக.

| மாற்றுச்சீட்டின் நாள் | தவணைக்காலம் | சலுகை நாட்கள் | செலுத்தற்குரிய நாள் |
|---|---|---|---|
| 1st மார்ச் | 2 மாதங்கள் | 3 | ? |
| 12th ஜூலை | 1 மாதம் | 3 | ? |

28) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு வீரா நிறுவனத்தின் 2017 டிசம்பர் 31ம் நாளுக்குரிய வங்கிச் சரிக்கட்டும் பட்டியலைத் தயார் செய்க.
அ) வங்கி அறிக்கையின் படியான வரவிருப்பு ரூ. 6,000. ஆ) தேசிய மின்னணு பணப்பரிமாற்றம் (NEFT) வாயிலாக வங்கியால் பெறப்பட்ட தொகை ரூ. 3,500 ரொக்க ஏட்டில் இரு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது. இ) மறுக்கப்பட்ட காசோலை தொகை ரூ. 2,500 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை
29) இருப்பாய்வு தயாரித்தபின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
அ) கொள்முதல் ஏட்டில் ரூ. 900 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது. ஆ) பழைய அறைகலன் விற்றது ரூ. 1,000 விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.
30) நேர்க்கோட்டு முறையில் தேய்மான தொகையைக் காண்க.
இயந்திரம் வாங்கிய விலை - ரூ. 80,000, முதலாக்கம் செய்ய வேண்டிய செலவுகள் - ரூ. 20,000 எதிர்நோக்கும் இறுதி மதிப்பு - ரூ. 4,00 எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் - 4 ஆண்டுகள்

## பகுதி - இ

**குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 31க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **7×3=21**

31) நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் கணக்கிட உதவும் சூத்திரங்கள் யாவை?
32) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
33) நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி ஏதேனும் மூன்றை விவரி.
34) ஆள்சார் கணக்கின் மூன்று வகைகளைக் கூறுக.
35) முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.
36) பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| கணக்கின் பெயர் | ரூ. | கணக்கின் பெயர் | ரூ. |
|---|---|---|---|
| வங்கிக் கடன் | 2,00,000 | கொள்முதல் | 1,30,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 | விற்பனை | 3,00,000 |
| சரக்கிருப்பு | 70,000 | கடனாளிகள் | 4,00,000 |
| முதல் | 2,50,000 | வங்கி | 2,00,000 |

37) பின்வரும் நடவடிக்கைகளை எழுதுபொருள் வியாபாரம் செய்யும் இராம் நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 2017 | ஜனவரி | 1 | அன்புவிற்கு கடனுக்கு விற்றது ரீம் ஒன்று ரூ. 150 வீதம் 20 ரீம்கள் வெள்ளைத்தாள் |
| | ஜனவரி | 2 | ஜெகதீஷ் நிறுவனத்திற்கு ஒரு டஜன் ரூ. 360 வீதம் 6 டஜன்கள் எழுதுகோல் கடனுக்கு விற்றது. |
| | ஜனவரி | 10 | பழைய செய்தித்தாளை ரொக்கத்திற்கு விற்றது ரூ. 620 |
| | ஜனவரி | 15 | இளங்கோவிற்கு கடனுக்கு விற்றது ஒன்று ரூ.170 வீதம் 10 வரைவு அட்டைகள் |
| | ஜனவரி | 20 | கனி விற்பனையகத்திற்கு ஒன்று 1,520 வீதம் 4 எழுது மேசைகளை ரொக்கத்திற்கு விற்றது |

38) ஏப்ரல் 1, 2015 அன்று ரூ.4,00,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கப்பட்டது. ரூ. 15,000 நிறுவுதல் செலவாகவும், ரூ. 10,000 வண்டிக் கட்டணமாகவும் செலவழிக்கப்பட்டது. நேர்க்கோட்டு முறையில் ஆண்டுதோறும் 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ல் முடிக்கப் பெறுகின்றன. முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இயந்திரத்தின் மீதான தேய்மான தொகையைக் கணக்கிடவும்.
39) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 31, மார்ச் 2018 ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | உள் திருப்பம் | 7,000 |
| கொள்முதல் | 27,000 | நிலக்கரி மற்றும் எரிவாயு | 3,300 |
| விற்பனை | 40,000 | உள்தூக்கு கூலி | 2,600 |
| கூலி | 2,500 | இறுதி சரக்கிருப்பு | 5,200 |
| வெளித்திருப்பம் | 5,200 | | |

40) சுரேஷ் என்பவரின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது வாராக் கடன் கணக்கு ரூ. 800 மற்றும் பற்பல கடனாளிகள் கணக்கு ரூ. 16,000 இருப்பு காட்டியது கூடுதல் வாராக்கடன் ரூ. 1,200 போக்கெழுதவும். வாராக்கடனுக்கு சரிக்கட்டுப் பதிவு தந்து இவ்விவரம் இலாப நட்டக்கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

## பகுதி - ஈ

**குறிப்பு : அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.** 7×5=35

41) அ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டு விளைவுகளை பதிவிட்டு காட்டுக.

அ) இராஜ் ரூ. 40,000 ரொக்கத்துடன் வணிகத்தைத் தொடங்கினார்.
ஆ) ரூ. 30,000 வைப்புத் தொகையுடன் வங்கியில் கணக்கினை ஆரம்பித்தார்.
இ) ஹரி என்பவரிடமிருந்து ரூ. 12,000க்கு கடனுக்கு சரக்கு வாங்கப்பட்டது.
ஈ) இராஜ் தமது சொந்தப் பயன்பாட்டிற்காக ரூ. 1,000 எடுத்துக் கொண்டார்.
உ) பற்று அட்டையினைப் பயன்படுத்தி ரூ. 10,000க்கு அறைகலன்கள் வாங்கப்பட்டது.
ஊ) முருகன் என்பவருக்கு சரக்கு விற்பனை செய்யப்பட்டு, ரூ. 6,000 பெறப்பட்டது.
எ) அலுவலகத் தேவைக்காக வங்கியிலிருந்து பணம் எடுக்கப்பட்டது ரூ. 1,000

(அல்லது)

ஆ) பாரதி என்பவர் ஒரு தனியாள் வணிகர் கடந்த ஐந்து வருடங்களாக எண்ணெய்ப் பொருட்களை வாங்கி விற்கும் தொழிலை செய்து வருகிறார். 2018 ஏப்ரல் 1 அன்று அவருடைய கணக்கேடுகள் பின்வரும் நடவடிக்கைகளைக் காட்டுகின்றன. ரொக்க இருப்பு ரூ. 25,000 வங்கி இருப்பு ரூ. 3,00,000. 2018 ஏப்ரல் மாதத்திற்கான அவருடைய நடவடிக்கைகள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல் 2018 | 1 | சரக்குகளை வாங்கி காசோலை கொடுத்தது | ரூ. 30,000 |
| | 5 | நவீன் என்பவருக்கு சரக்குகளை விற்று அவரிடமிருந்து தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் மூலம் பணம் பெற்றது | ரூ. 40,000 |
| | 6 | சேவியருக்கு சரக்குகளை ரொக்கத்திற்கு விற்றது | ரூ.20,000 |
| | 9 | அப்துல் என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | ரூ.25,000 |
| | 18 | அப்துல் என்பவரிடமிருந்து ரொக்கம் பெற்றது | ரூ.10,000 |

மேலே கொடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு பேரேட்டுக் கணக்குகளை தயாரிக்கவும்.

42) அ) மேரி என்ற அரிசி வியாபாரி கடந்த ஐந்து ஆண்டுகளாக தொழில் நடத்தி வருகிறார். அவருடைய குறிப்பேட்டில் 2018 மார்ச் மாதத்திற்கான நடவடிக்கைகளை பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| மார்ச் 2018 | 1 | சிபி என்பவரிடமிருந்து அரிசி மூட்டைகள் கடன் கொள்முதல் செய்தது ரூ. 20,000 |
| | 2 | இணைய வங்கி மூலமாக மின்கட்டணம் செலுத்தியது ரூ. 500 |
| | 3 | சிபியிடமிருந்து வாங்கிய சரக்கு திருப்பி அனுப்பப்பட்டது ரூ. 5,000 |
| | 4 | சொந்த பயன்பாட்டிற்காக எடுத்த அரிசி மூட்டைகள் மதிப்பு ரூ. 1,000 |
| | 5 | விளம்பரக் கட்டணம் செலுத்தியது ரூ. 2,000 |
| | 6 | மனோ என்பவருக்கு சரக்கு கடனுக்கு விற்றது ரூ. 20,000 |
| | 7 | மனோ என்பவரால் சரக்கு திருப்பியனுப்பப்பட்டது ரூ. 5,000 |
| | 8 | மனோவிடமிருந்து பெறவேண்டிய தொகை மின்னணு பணப்பரிமாற்றம் மூலமாக பணம் பெறப்பட்டது. |

(அல்லது)

ஆ) இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதவும்.

அ) விற்பனை ஏட்டின் மொத்தம் ரூ. 2,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
ஆ) இயந்திரம் ரூ. 3,000க்கு கொள்முதல் செய்தது கொள்முதல் ஏட்டில் பதியப்பட்டுள்ளது.
இ) மதிக்கு ரூ. 45க்கு சரக்கு விற்றது அவரது கணக்கில் ரூ. 54 என எடுத்து எழுதப்பட்டுள்ளது.
ஈ) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தம் ரூ. 200 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது
உ) விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகை ரூ. 1,122 பேரேட்டில் ரூ. 1,222 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

43) அ) இராமலிங்கம் என்பவரின் 2017 ஜூலை மாதத்திற்கான பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து தனிப்பத்தி ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2017 ஜூலை | 1 | கை ரொக்கம் | 32,000 |
| | 5 | கீர்த்தனாவிடமிருந்து ரொக்கம் பெற்றது | 5,000 |
| | 6 | கட்டுமச் செலவுக்காக பணம் கொடுத்தது | 300 |
| | 7 | ரொக்க கொள்முதல் | 12,400 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 2,600 |
| | 10 | மேலாளருக்கு சம்பளம் ரொக்கமாகத் தரப்பட்டது | 7,000 |
| | 11 | பாலா என்பவருக்கு ரொக்கம் கொடுத்தது | 3,000 |
| | 12 | போஸ் என்பவரிடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | 2,500 |
| | 24 | பணம் வைப்பு இயந்திரத்தின் மூலம் வங்கிக்கு செலுத்திய ரொக்கம் | 4,000 |
| | 27 | வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 2,000 |
| | 31 | அலுவலக வாடகை ரொக்கமாகச் செலுத்தியது | 6,000 |

(அல்லது)

ஆ) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன்பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2017 ஜூலை | 1 | காசாளரிடமிருந்து முன்பணம் பெற்றது | 2,000 |
| | 7 | மடல் ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது | 100 |
| | 8 | வெள்ளைத் தாள்கள் வாங்கியது | 50 |
| | 10 | ஆட்டோரிக்ஷா கட்டணம் கொடுத்தது | 200 |
| | 15 | கூலி கொடுத்தது | 300 |
| | 18 | தபால் செலவுகள் செய்தது | 100 |
| | 21 | எழுதுபொருள்கள் வாங்கியது | 450 |
| | 23 | தேநீர் செலவுகள் செய்தது | 60 |
| | 25 | துரித அஞ்சல் செலவு செய்தது | 150 |
| | 27 | சிற்றுண்டி செலவுகள் செய்தது | 250 |
| | 31 | ஏற்றிச் செல் செலவுகள் செய்தது | 150 |

44) அ) பின்வரும் நடவடிக்கைகளை 2017 ஜனவரி மாதத்திற்கான சுமன் மின்னனு விற்பனையகத்தின் துணை ஏடுகளில் பதிவு செய்க.

| | |
|---|---|
| 2017 ஜனவரி 2 | இராஜ் மின்னணுப் பொருள் நிறுவனத்திடம் கடனுக்கு வாங்கியது ஒன்று ரூ. 5,500 வீதம் 20 கைப்பேசிகள், ஒன்று ரூ. 14,500 வீதம் 10 வண்ணத்தொலைக்காட்சிகள் |
| ஜனவரி 5 | ரூபி நிறுவனத்திடம் கடனுக்கு வாங்கியது ஒன்று ரூ. 1,650 வீதம் 10 வானொலிப்பெட்டிகள், ஒன்று ரூ. 2,500 வீதம் 8 ஒலிப்பதிவுபெட்டிகள் இரண்டிலும் 10% வியாபாரத்தள்ளுபடி கழிக்கவும். |
| ஜனவரி 10 | பழுதின் காரணமாக இராஜ் மின்னணுப் பொருள் நிறுவனத்திற்கு 4 கைப்பேசிகள் திருப்பி அனுப்பப்பட்டன. ரொக்கம் பெறப்படவில்லை. |
| ஜனவரி 20 | சுகந்தி நிறுவனத்திடம் கடனுக்கு வாங்கியது ஒன்று ரூ. 3,700 வீதம் 10 வானொலிப்பெட்டிகள், ஒன்று ரூ. 27,000 வீதம் 2 சோனி வண்ணத் தொலைக்காட்சிகள் இரு நடவடிக்கைகளுக்கும் வியாபாரத்தள்ளுபடி 5% கழிக்கவும். |

(அல்லது)

ஆ) 2018 மார்ச் 31ஆம் நாளுக்குரிய வங்கிச் சரிக்கட்டும் பட்டியலைத் தயார் செய்து ரொக்க ஏட்டின் படியான இருப்பினைக் கண்டறிக.

அ) வங்கி அறிக்கையின்படியான வங்கி இருப்பு ரூ. 15,000

ஆ) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது ரூ. 2,500

இ) வங்கிக் கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ரூ. 250

ஈ) வங்கியால் பற்று செய்யப்பட்ட வட்டி ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ரூ. 500

உ) நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய காப்பீடு முனைமம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ரூ. 300

ஊ) செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது ரூ. 900

45) அ) பின்வரும் பிழைகள், இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்தவும்.

அ) பெற்றவாடகைக் கணக்கின் கூட்டுத்தொகை ரூ. 900 குறைவாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.

ஆ) பெற்றவாடகைக் கணக்கின் கூட்டுத்தொகை ரூ. 1,000 அதிகமாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.

இ) சம்பளக் கணக்கின் கூட்டுத்தொகை ரூ. 1,100 குறைவாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.

ஈ) சம்பளக் கணக்கின் கூட்டுத்தொகை ரூ. 1,200 கூடுதலாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.

உ) வெங்கட்டுக்கு ரூ. 2,000 கூலி செலுத்தியது. கூலிக் கணக்கில் இருமுறை எடுத்தெழுதப்பட்டுள்ளது.

(அல்லது)

ஆ) ஜெயசீலி என்னும் தனிவணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார். 2018 ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| 2018 ஜனவரி | 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ. 80,000 |
| | 2 | வங்கியில் செலுத்திய ரொக்கம் ரூ. 40,000 |
| | 3 | ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ரூ. 5,000 |
| | 4 | லிப்டன் நிறுவனதிடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது ரூ. 10,000 |
| | 5 | ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ரூ. 11,000 |

46) அ) இராம் ஆடை நிறுவனம் ஏப்ரல் 1, 2014 அன்று ரூ. 2,00,000 மதிப்புள்ள ஓர் இயந்திரத்தை நிலா நிறுவனத்திடமிருந்து கடனாக வாங்கியது. அதற்கு நிறுவுகைச் செலவாக ரூ. 10,000 செலவழித்தது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கப்பட்டது. முதல் மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கினை தயாரிக்கவும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ல் முடிக்கப் பெறுகின்றன.

(அல்லது)

வியாபாரி ஒருவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து 2017 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய மொத்த இலாபம் மற்றும் நிகர லாபம் கணக்கிடவும்.

| *விவரம்* | ரூ. | *விவரம்* | ரூ. |
|---|---|---|---|
| விற்பனை | 72,250 | கொள்முதல் | 32,250 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 7,600 | விற்பனைத் திருப்பம் | 1,250 |
| கொள்முதல் திருப்பம் | 250 | வாடகை | 300 |
| அலுவலக அச்சு எழுது பொருள் செலவு | 250 | சம்பளம் | 3,000 |
| இதரச் செலவுகள் | 200 | விற்பனை தொடர்பான பயணச்செலவுகள் | 1,800 |
| விளம்பரம் | 500 | கழிவு செலுத்தியது | 150 |
| பொதுச் செலவுகள் | 2,500 | அலுவலகச் செலவுகள் | 1,600 |
| பங்காதாயம் பெற்றது | 2,500 | கூலி | 2,600 |
| பழைய அறைகலன் விற்றதில் நட்டம் | 300 | முதலீடுகள் விற்றதில் ஏற்பட்ட இலாபம் | 500 |

47) அ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து அப்துல் ரகுமான் என்பவரின் 2016, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும். 31.12.2016 அன்று இறுதிச் சரக்கிருப்பு ரூ. 2,000 என்று மதிப்பிடப்படுகிறது.

| *விவரம்* | ரூ. | *விவரம்* | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 500 | கொள்முதல் | 1,300 |
| விற்பனை | 5,000 | கூலி | 700 |
| பெற்ற தள்ளுபடி | 500 | சம்பளம் | 500 |
| கட்டிடம் | 50,000 | முதல் | 50,000 |
| கை ரொக்கம் | 4,500 | | |

(அல்லது)

ஆ) பின்வருபவை முதலின, வருவாயின இனங்களா என்பதை கூறுக.

i) ஏற்கனவே உள்ள கட்டடத்தோடு கூடுதலாகக் கட்டியது ரூ. 5,000. ii) பழைய மகிழுந்து

iii) புதிய தொழிற்சாலையை வண்ணம் பூசுவதற்கான செலவு ரூ. 10,000. iv) புதிய இயந்திரம் மீதான ஏற்றிச் செல் செலவு, வண டிக் கட்டணம் ரூ. 150 மற்றும் நிறுவுகைச் செலவுகள் ரூ. 200.

v) வாங்கிய பழைய வாகனத்தை பழுது பார்த்தற்கான செலவு ரூ. 150

----------